( Local Authority logo goes here )

நீங்கள் வேல்ஸில் வசிப்பவராகவும் (வழக்கமாக வசிப்பவராகவும்) 14 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் இருந்தால் வாக்களிக்கப் பதிவு செய்யலாம். நீங்கள் 16 வயது அடையும் வரை உள்ளூர் கவுன்சில் தேர்தல் அல்லது செனட் தேர்தல்களில் வாக்களிக்க முடியாது, மற்றும் 18 வயது அடையும் வரை இங்கிலாந்து நாடாளுமன்றம் அல்லது காவல்துறை மற்றும் குற்ற ஆணையர் (PCC) தேர்தல்களில் வாக்களிக்க முடியாது.

பின்வருபவர்களில் நீங்களும் ஒருவராக இருக்க வேண்டும்:

- பிரிட்டிஷ் குடிமகன் அல்லது ஐரிஷ் குடிமகன்
- காமன்வெல்த் குடிமகன் (மால்டா மற்றும் சைப்ரஸ் நாட்டினர் உட்பட) இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகிய நாடுகளில் நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு அனுமதி பெற்றவர்கள், அல்லது அனுமதி தேவையில்லாதவர்கள்
- இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு அனுமதி பெற்ற வெளிநாட்டவர், அல்லது அனுமதி தேவையில்லாதவர்கள்
- ஐரோப்பிய ஒன்றிய (EU) குடிமகன்.

இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் நுழைவதற்கான அல்லது தங்குவதற்கான அனுமதி (நுழைவதற்கு அனுமதி அல்லது தங்குவதற்கு அனுமதி என்றும் அழைக்கப்படுகிறது) என்பது சட்டப்பூர்வ குடியேற்ற நிலையைக் குறிக்கிறது.

**இந்தப் படிவத்தை பெரிய எழுத்துக்களில் அல்லது வேறு வடிவத்தில் கோர எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

**இணைய வழியைப் பயன்படுத்தவும்**

**gov.uk/register-to-vote** என்ற வலைத்தளத்தில் இந்தப் படிவத்தை விரைவாகவும் எளிதாகவும் பூர்த்தி செய்யலாம்.

# வாக்களிக்க பதிவு செய்யுங்கள்

## 1 உங்கள் பெயர் மற்றும் முகவரி

முதற்பெயர்(கள்)

கடைசி பெயர்

உங்கள் முகவரி

அஞ்சல் குறியீடு

நீங்கள் வேறொரு முகவரியிலும் வசிக்கிறீர்களா? தயவுசெய்து டிக் செய்யவும். ☐ இல்லை ☐ ஆம்

ஆம் எனில், நீங்கள் இப்போது இந்த முகவரியை எங்களிடம் கொடுக்க வேண்டியதில்லை ஆனால் நாங்கள் பின்னர் கூடுதல் தகவல்களைக் கேட்கலாம்.

தொலைபேசி எண் (விரும்பினால்)

மின்னஞ்சல் (விரும்பினால்)

மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை அளிப்பது உங்கள் விண்ணப்பத்தைப் பற்றி உங்களைத் தொடர்புகொள்வதற்கான விரைவான மற்றும் எளிதான வழியை வழங்குகிறது.

நாங்கள் அச்சிட்ட தகவல்கள் தவறாக இருந்தால், தயவுசெய்து அதை அடித்துவிட்டு சரியான தகவலை எழுதவும்.

## 2 கடந்த 12 மாதங்களில் வீட்டை மாற்றினீர்களா?

தயவுசெய்து டிக் செய்யவும்.

☐ இல்லை ☐ ஆம்

ஆம் எனில், கடந்த ஆண்டில் நீங்கள் வாழ்ந்த முந்தைய வீட்டு முகவரியைக் கொடுங்கள் அல்லது உங்கள் விண்ணப்பம் தாமதமாகலாம்.

அஞ்சல் குறியீடு

இந்த முகவரி வெளிநாட்டில் இருந்தால், நீங்கள் வெளிநாட்டு வாக்காளராக இங்கிலாந்தில் பதிவு செய்திருக்கிறீர்களா?

தயவுசெய்து டிக் செய்யவும். ☐ இல்லை ☐ ஆம்

## 3 உங்கள் தேசியம்

(கூடுதல் தகவல் பக்கம் 4 -இல் கிடைக்கும்)

தயவுசெய்து உங்கள் தேசியத்தை குறிப்பிடவும். நீங்கள் பல குடியுரிமைகளை வைத்திருப்பவர் என்றால், அவை அனைத்தையும் சேர்க்கவும்.

(உங்கள் தேசியம் தெரியவில்லையா? பிரிவு 10 -ஐப் பார்க்கவும்).

## 4 உங்கள் குடியேற்ற நிலை

(கூடுதல் தகவல் பக்கம் 4 -இல் கிடைக்கும்)

**நீங்கள் பின்வரும் நாடுகளில் ஒன்றில் ஐரோப்பிய ஒன்றிய குடிமகனாக இருந்தால் மட்டுமே இந்தப் பிரிவைப் பூர்த்தி செய்யவும்:**

**ஆஸ்திரியா • செக் குடியரசு • ஜெர்மனி • லாட்வியா • ஸ்லோவாக்கியா • பெல்ஜியம் • எஸ்டோனியா • கிரீஸ் • லிதுவேனியா • ஸ்லோவேனியா • பல்கேரியா • பின்லாந்து • ஹங்கேரி • நெதர்லாந்து • சுவீடன் • குரோஷியா • பிரான்ஸ் • இத்தாலி • ருமேனியா**

31 டிசம்பர் 2020 முதல் ஐக்கிய இராச்சியம், சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் தொடர்ந்து நுழையவோ அல்லது தங்கவோ உங்களுக்கு அனுமதி இருக்கிறதா அல்லது அனுமதி தேவையில்லையா?

பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை 31 டிசம்பர் 2020 அன்று அல்லது அதற்கு முன் உங்களுக்குப் பொருந்தி, இடைவேளையின்றி தொடர்ந்திருந்தால் 'ஆம்' எனப் பதிலளிக்கவும்:

- நீங்கள் சேரும் குடும்ப உறுப்பினராக விண்ணப்பித்திருந்தால் தவிர, ஐரோப்பிய ஒன்றிய தீர்வுத் திட்டத்தின் கீழ் தீர்வு அல்லது முன்-தீர்வு நிலை பெற்றிருத்தல்
- இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு காலவரையற்ற அல்லது வரையறுக்கப்பட்ட அனுமதி பெற்றவர்கள்
- இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் வசிப்பவர்கள் ஆனால் குடியேற்றக் கட்டுப்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவர்கள்.

இந்தக் கேள்விக்கான உங்கள் பதில் 'ஆம்' எனில், உங்கள் குடியேற்ற நிலையின் விதிமுறைகளின் கீழ் அனுமதிக்கப்படும் ஒரு காலத்திற்கு நீங்கள் இங்கிலாந்திற்கு வரவில்லை என்றால், நீங்கள் 'ஆம்' என்கிற விருப்பத்தை டிக் செய்ய வேண்டும்.

தயவுசெய்து டிக் செய்யவும். ☐ இல்லை ☐ ஆம்

( Barcode goes here )

## 5 உங்கள் பிறந்த தேதி (கூடுதல் தகவல் பக்கம் 4 -இல் கிடைக்கும்)

தேதி | மாதம் | வருடம்

உங்கள் பிறந்த தேதி உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் வயது பின்வருமாறு இருந்தால் டிக் செய்யவும்: 14-15 ☐ 16-17 ☐ 18-75 ☐ 76 வயது அல்லது அதற்கு மேல் ☐

(உங்கள் பிறந்த தேதி தெரியவில்லையா? பிரிவு 10 -ஐப் பார்க்கவும்).

## 6 உங்கள் தேசிய காப்பீட்டு எண் (நீங்கள் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால்)

இதை உங்கள் ஊதியச் சீட்டு அல்லது வரி, ஓய்வூதியம் அல்லது சலுகைகள் பற்றிய அதிகாரப்பூர்வ கடிதங்களில் காணலாம்.

☐ நீங்கள் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால் டிக் செய்யவும்.

(உங்கள் தேசிய காப்பீட்டு எண் தெரியவில்லையா? பிரிவு 10 -ஐப் பார்க்கவும்).

## 7 உங்கள் பெயரை மாற்றியிருக்கிறீர்களா? (கூடுதல் தகவல் பக்கம் 4 -இல் கிடைக்கும்)

உங்களின் மிகச் சமீபத்திய முந்தைய பெயரை எங்களுக்கு வழங்கவும் (விரும்பினால்).

உங்கள் பெயரை மாற்றம் செய்த தேதியை எங்களிடம் தெரிவிக்கவும் (விரும்பினால்).

தேதி | மாதம் | வருடம்

## 8 பொது பதிவேடு (கூடுதல் தகவல் பக்கம் 4 -இல் கிடைக்கும்)

பொது பதிவேடு என்பது வாக்காளர் பதிவேட்டின் சாரம்சம் ஆகும், ஆனால் அது தேர்தலுக்கு பயன்படுத்தப்படுவதில்லை. இதை யார் வேண்டுமானாலும் வாங்கலாம் மற்றும் இது நேரடி சந்தைப்படுத்தல் உட்பட பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

பொது பதிவேட்டில் உங்கள் பெயர் மற்றும் முகவரி சேர்க்கப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் டிக் செய்யவும். ☐

நீங்கள் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால் உங்கள் விவரங்கள் பொது பதிவேட்டில் சேர்க்கப்படாது.

## 9 தபால் மூலம் அல்லது ப்ராக்ஸி மூலம் வாக்களிக்க விரும்புகிறீர்களா?

நீங்கள் ஒரு வாக்குச் சாவடியில் நேரில் வாக்களிக்க விரும்பினால், இந்தப் பகுதியை காலியாக விட வேண்டும்.

தபால் அல்லது ப்ராக்ஸி மூலம் வாக்களிக்க, நீங்கள் ஒரு தனி விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும். கூடுதல் தகவல்களை **gov.uk/how-to-vote** இல் காணலாம், அல்லது நீங்கள் எப்படி வாக்களிக்க விரும்புகிறீர்கள் என்பதை கீழே டிக் செய்யவும், நாங்கள் உங்களுக்கு தகவலை அனுப்புவோம்.

☐ தபால் மூலம் ☐ ப்ராக்ஸி மூலம் (உங்கள் சார்பாக மற்றொருவர் வாக்களிக்கிறார்)

## 10 உங்கள் தேசியம், பிறந்த தேதி அல்லது தேசிய காப்பீட்டு எண் தெரியவில்லையா? ஏன் தெரியவில்லை என்று எங்களிடம் தெரிவிக்கவும்

இந்த விவரங்களை உங்களால் வழங்க முடியாவிட்டால், உங்கள் விண்ணப்பத்தைச் செயலாக்குவதற்கு முன் நாங்கள் உங்களிடம் வேறு சான்றுகளைக் கேட்கலாம்.

## 11 உறுதிமொழி

நான் தற்போது இந்த முகவரியில் வசிக்கிறேன். எனக்கு தெரிந்த வரையில், இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை ஆகும்.

நான் வழங்கிய தகவல்கள் வாக்காளர் பதிவேட்டில் பயன்படுத்தப்படும் என்பதைப் புரிந்துகொள்கிறேன்.

தேவைப்படும்போது பதிவு செய்ய விண்ணப்பம் செய்யவில்லை என்றால், £80 அபராதம் விதிக்கப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். இந்த £80 அபராதம் 14 அல்லது 15 வயதுடையவர்களுக்குப் பொருந்தாது. இந்தப் படிவத்தில் தெரிந்தே தவறான தகவலை வழங்குவது குற்றம் என்பதையும், குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனை மற்றும்/அல்லது வரம்பற்ற அபராதம் விதிக்கப்படலாம் என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

**கையொப்பம்**

**இன்றைய தேதி**

தேதி | மாதம் | வருடம்

### வாக்குச் சாவடியில் வாக்களித்தல்

UK பாராளுமன்றம் மற்றும் காவல்துறை மற்றும் குற்ற ஆணையர் தேர்தல்களில், நீங்கள் வாக்களிக்க உங்கள் வாக்குச் சாவடியில் புகைப்பட ஐடியைக் காட்ட வேண்டும். உங்களிடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட புகைப்பட அடையாள அட்டை இல்லையென்றால், இலவச வாக்காளர் அடையாள ஆவணம், வாக்காளர் அதிகாரச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும் தகவலுக்கு, **gov.uk/how-to-vote/photo-id-youll-need** என்ற இணையதளத்திற்குச் செல்லவும் அல்லது எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், பக்கம் 1 -இல் உள்ள விவரங்களைப் பயன்படுத்தி எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

*( Barcode goes here )*

## உங்கள் தேசியம் மற்றும் குடியேற்ற நிலை

இங்கிலாந்து, சேனல் தீவுகள் அல்லது மேன் தீவு ஆகியவற்றில் நுழைவதற்கான அல்லது தங்குவதற்கான அனுமதி (நுழைவதற்கு அல்லது தங்குவதற்கு அனுமதி என்றும் அழைக்கப்படுகிறது) என்பது சட்டப்பூர்வ குடியேற்ற நிலையை குறிக்கிறது.

உங்கள் தேசியத்தைப் பற்றிய கூடுதல் ஆதாரம் எங்களுக்குத் தேவைப்படலாம் அல்லது உங்கள் தேசியம் அல்லது குடியேற்ற நிலையை அரசாங்கப் பதிவுகளின்படி நாங்கள் சரிபார்க்கலாம்.

பிரிவு 4 'உங்கள் குடியேற்ற நிலை' காவல் மற்றும் குற்ற ஆணையர் தேர்தல்களில் மட்டுமே வாக்களிப்பதற்கான உங்கள் தகுதியைத் தீர்மானிக்கிறது. அது வாக்களிக்க பதிவு செய்வதற்கான உங்கள் தகுதியை, அல்லது செனட்டுக்கு வாக்களிப்பதை அல்லது வேல்ஸில் உள்ள உள்ளூர் கவுன்சில் தேர்தல்களில் வாக்களிப்பதை தீர்மானிக்காது. இந்தப் பிரிவு உங்களுக்குப் பொருந்தினால், உங்கள் வரலாற்று தேசியம் அல்லது வரலாற்று குடியேற்ற நிலையை அரசாங்க பதிவுகளின்படி நாங்கள் சரிபார்க்கலாம்.

## உங்கள் பிறந்த தேதி

உங்கள் பிறந்த தேதி உங்களுக்குத் தெரியாவிட்டால், அதிகாரப்பூர்வ ஆவணங்களில் (உதாரணமாக, உங்கள் பாஸ்போர்ட் அல்லது ஓட்டுநர் உரிமம்) குறிப்பிடப்பட்டிருக்கும் தேதியைத் தெரிவிக்கவும் அல்லது ஒரு பெட்டியில் டிக் செய்யவும். உங்கள் பிறந்த தேதி உங்களை அடையாளப்படுத்துகிறது, வாக்களிப்பதற்கான உங்கள் தகுதியை உறுதிப்படுத்துகிறது மற்றும் ஜூரி சேவைக்கு உங்களை அழைக்க பயன்படுத்தப்படலாம்.

## உங்கள் பெயரை மாற்றியிருக்கிறீர்களா?

உதாரணமாக, நீங்கள் திருமணம் செய்துகொண்டு உங்கள் பெயரை மாற்றியிருக்கலாம். உங்கள் பெயர் மாற்றம் குறித்த விவரங்களை நீங்கள் எங்களுக்குத் தர வேண்டியதில்லை ஆனால் அது உங்களை அடையாளம் காண எங்களுக்கு உதவியாக இருக்கும். இந்த தகவல் வழங்கப்படவில்லை என்றால், நீங்கள் கூடுதல் ஆவண சான்றுகளை வழங்க வேண்டியிருக்கும்.

## பொது பதிவேடு

**இரண்டு பதிவேடுகள் உள்ளன. ஏன்?** பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி, பதிவு அலுவலர்கள் இரண்டு பதிவேடுகளை வைத்திருக்கிறார்கள் - தேர்தல் பதிவேடு மற்றும் பொது பதிவேடு (திருத்தப்பட்ட பதிவேடு என்றும் அழைக்கப்படுகிறது).

**வாக்காளர் பதிவேட்டில்** பொதுத் தேர்தலில் வாக்களிக்கப் பதிவு செய்த அனைவரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. தகுதியானவர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துவது போன்ற தேர்தல் நோக்கங்களுக்காக இந்தப் பதிவேடு பயன்படுத்தப்படுகிறது. இது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிற வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது:

- குற்றத்தைக் கண்டுபிடித்தல் (உதாரணமாக, மோசடி)
- ஜூரி சேவைக்கு மக்களை அழைத்தல்
- கடன் விண்ணப்பங்களைச் சரிபார்த்தல்.

**பொது பதிவேடு** என்பது தேர்தல் பதிவேட்டின் சாரம்சம் ஆகும், ஆனால் இது தேர்தலுக்கு பயன்படுத்தப்படுவதில்லை. இதை எந்தவொரு நபர், நிறுவனம் அல்லது அமைப்பும் வாங்கலாம். எடுத்துக்காட்டாக, பெயர் மற்றும் முகவரி விவரங்களை உறுதிப்படுத்த வணிகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களால் இது பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருந்தால், அவற்றை அகற்றும்படி நீங்கள் கேட்கும் வரை, உங்கள் பெயர் மற்றும் முகவரி பொது பதிவேட்டில் சேர்க்கப்படும். பொது பதிவேட்டில் இருந்து உங்கள் விவரங்களை நீக்குவது உங்கள் வாக்களிக்கும் உரிமையைப் பாதிக்காது.

**நீங்கள் 14 அல்லது 15 வயதுடையவராக இருந்தால்**, பொது பதிவேட்டில் சேர்க்கப்பட மாட்டீர்கள்
நீங்கள் வாக்காளர் பதிவேட்டில் சேர்க்கப்படுவீர்கள், ஆனால் நீங்கள் வழங்கும் விவரங்களை தேர்தல் பதிவு அலுவலர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் மட்டுமே பார்க்க முடியும். வெளியிடப்படும் எந்தப் பதிவேட்டிலும் உங்கள் விவரங்கள் சேர்க்கப்படாது.
தேர்தலுக்கு சுமார் ஆறு வாரங்களுக்கு முன்பு, அந்தத் தேர்தலில் வாக்களிக்கக்கூடிய அனைவரின் விவரங்களும் சிலருக்குத் தேவைப்படும். செனெட் அல்லது உள்ளூர் கவுன்சில் தேர்தல் தேதியில் உங்களுக்கு 16 வயது பூர்த்தியாகி இருந்தால், தேர்தலை நடத்தும் நபர்களுக்கும், வாக்காளர்களுக்குத் தகவல்களை வழங்க விரும்பும் வேட்பாளர்களுக்கும் உங்கள் பெயர் மற்றும் முகவரி வழங்கப்படும்.

பதிவேட்டில் உங்கள் பெயர் அல்லது முகவரி இருப்பது உங்கள் பாதுகாப்பை பாதிக்கலாம் என்று நீங்கள் கவலைப்பட்டால், உங்களுக்கு வேறு விருப்பங்கள் உள்ளன. சில சூழ்நிலைகளில், பதிவேட்டில் உங்கள் பெயர் மற்றும் முகவரி இல்லாமல் பதிவு செய்யலாம். மேலும் அறிய, தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும். பக்கம் 1 இல் எங்கள் முகவரியைக் காணலாம். **gov.uk/register-to-vote** என்ற வலைத்தளத்தில் இரண்டு பதிவேடுகள் மற்றும் அவை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைப் பற்றிய கூடுதல் தகவலை நீங்கள் காணலாம்.

## தனியுரிமை அறிக்கை

தேர்தல் பதிவு அதிகாரி கட்டுப்படுத்தும் அலுவலர் ஆவார். இந்த விண்ணப்பப் படிவத்தில் உள்ள தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கான அவர்களின் சட்டப்பூர்வமான அடிப்படை என்னவென்றால், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1983 மற்றும் அது தொடர்பான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொது நலனுக்காக ஒரு பணியைச் செய்வதற்கு செயலாக்கம் அவசியமாகும். உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பாகச் செயல்படுத்தவும், தரவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்கவும் தேர்தல் பதிவு அதிகாரி சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார்.

பொது பதிவேட்டில் இருந்து நீங்கள் விலகினால், உங்கள் பெயர் மற்றும் முகவரி தேர்தல் நோக்கங்களுக்காக (தேர்தல் பதிவேட்டை ஆதரிக்கும் பிற தரவு ஆதாரங்களுடன் பொருத்திப் பார்ப்பது உட்பட) மற்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிற வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். உங்கள் தகவலை ஜனநாயக ஈடுபாடு நடவடிக்கைகளுக்கும் (அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் மூலம்), குற்றம் கண்டுபிடித்தல், ஜூரி சம்மன் மற்றும் கடன் விண்ணப்ப அடையாளச் சரிபார்ப்புகளுக்கும் பயன்படுத்த சட்டம் அனுமதிக்கிறது.

பொது பதிவிலிருந்து நீங்கள் விலகவில்லை என்றால், உங்கள் பெயர் மற்றும் முகவரியை யார் வேண்டுமானாலும் வாங்கலாம் மற்றும் நேரடி சந்தைப்படுத்தல் உட்பட பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம்.

<<Web>> -இல் உள்ள தனியுரிமை அறிவிப்பைப் பார்க்கவும் அல்லது நகலைக் கோர, தேர்தல் பதிவு அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்.

«ERO name» «ERO address» «ERO telephone»

## படிவத்தைப் புரிந்துகொள்வதில் பிரச்சனை உள்ளதா?

**இந்தப் படிவத்தைப் புரிந்துகொள்வதற்கு அல்லது நிரப்புவதற்கு உதவி தேவைப்பட்டால் - அல்லது பெரிய எழுத்துக்களில் அல்லது வேறு வடிவத்தில் கோர எங்களைத் தொடர்பு கொள்ளவும். எங்கள் தொடர்பு விவரங்கள் பக்கம் 1 இல் உள்ளன.**